30.06.2025 S.C.No.138 of 2017 P.W.52 – Anandhakumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A2 to A5 present. A1 and A6 absent and their absence condoned as u/s. 317 Cr.P.C. petitions filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.30 P.M.

**5 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1–ம் எதிரி தரப்பில் ஏற்படுத்தப்பட்ட குறுக்கு விசாரணையை இந்த எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொண்டு மேலும் தொடர் குறுக்கு விசாரணை

கே: நீங்கள் இந்த வழக்கு விசாரணையை ஏற்கனவே ஒரு போலீஸ் அதிகாரி புலன் விசாரணை செய்தபோது எதற்காக இந்த விசாரணையை அவரிடமிருந்து மாற்றி என்னிடம் கொடுத்தார்கள் என்ற விவரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால்?

ப: காவல் துறை இயக்குநரின் உத்தரவின்படி இந்த வழக்கு சட்ட ஒழுங்கு காவல் பிரிவிலிருந்து குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறைக்கு மாற்றப்பட்டு அதில் என்னை எங்கள் துறை சார்ந்த கூடுதல் தலைமை காவல் இயக்குநர் நியமித்தார்.

கே: அது வாய்மொழி உத்தரவா அல்லது எழுத்து மூலமான உத்தரவா என்றால்?

ப: எழுத்து மூலமான உத்தரவு.

கே: 5 மற்றும் 6 எதிரிகள் எந்த காவல் நிலையத்தில் சம்பவ காலத்தில் பணிபுரிந்தார்கள் என்ற விவரத்தை விசாரணையில் தெரிந்துக்கொண்டீர்களா என்றால்?

ப: தெரிந்துக்கொண்டேன். 16.05.2015–ல் 5–ம் எதிரி முரளி ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் 2–ம் நிலை காவலராகவும், 6–ம் எதிரி சுரேஷ் திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தில் 2–ம் நிலை காவலராகவும் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள்.

கே: சம்பவ காலத்தில் ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் ஆய்வாளர் பெயர் என்ன என்றால்?

ப: திரு. சரவணன்.

கே: 5ம் எதிரி முரளி ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் எவ்வளவு காலம் பணியாற்றினார் என்பதை விசாரித்தீர்களா?

ப: விசாரித்தேன். அவர் 31.12.2003 அன்று 2ம் நிலை காவலராக பணியில் சேர்ந்தார். பின்னர் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் சம்பவம் நடந்ததற்கு முன்னர் இரண்டு ஆண்டுகளாக 2ம் நிலை காவலராக பணியாற்றியிருந்தார்.

கே: 6ம் எதிரி சுரேஷ் பணியாற்றிய வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தின் அப்போதைய ஆய்வாளர் பெயர் என்ன என்றால்?

ப: தற்போது நினைவில்லை.

கே: 5 மற்றும் 6 எதிரிகள் தனிப்படையில் சம்பவ காலத்தில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த சிறப்புபடையில் 6–ம் எதிரி சுரேஷ் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து பணியமர்த்தப்பட்டதற்கு யாருடைய உத்தரவின் கீழ் அவ்வாறு பணியாற்ற முடியும் என்றால்?

ப: டிஐஜி (காவல் துறை துணைத்தலைவர்) உத்தரவின் மூலம்.

கே: 5ம் எதிரி முரளியை அந்த தனிப்படையில் பணியாற்ற வேலூர் மாவட்ட துணைக்கண்காணிப்பாளர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: 5 மற்றும் 6 எதிரிகளை தனிப்படையில் பணியாற்றி வந்த நிலையில் போலீஸ் உயர் அதிகாரிகளின் உத்தரவின்றி வேறு பணிகளுக்கு அவர்களை அனுப்ப இயலாது என்றால்?

ப: சரிதான்.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் ஆய்வாளர் சரவணன் 5ம் எதிரி முரளியை வேறு பணிகளுக்கு அனுப்ப உத்தரவிட முடியாது என்றால்?

ப: சரிதான்.

கே: Shadow duty, Special team என்றால் என்ன?

ப: Shadow duty என்பது ஒரு கைதி அல்லது விசாரணைக்கு உட்படுத்தும் சந்தேக நபரை பாதுகாப்பது குறித்து போடப்படும் காவல் அலுவல் சார்ந்த பணிதான்.

கே: டிஎஸ்பி புலன் விசாரணை செய்யும் வழக்கில் Special team, Shadow duty பார்த்து வரும் காவலர்கள் வேறு பணிகளுக்கு அனுப்ப இயலுமா என்றால்?

ப: முடியாது.

கே: நீங்கள் குற்ற எண் 158/2015 வழக்கை விசாரித்த கோவிந்தசாமி ஆய்வாளரை விசாரித்தீர்களா?

ப: இல்லை.

கே: திரு.கோவிந்தசாமி ஆய்வாளர் சாட்சியங்களிடம் பதிவு செய்த கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலம் உள்ளதா?

ப: உள்ளது.

கே: திரு.கோவிந்தசாமி ஆய்வாளர் பதிவு செய்த வாக்குமூலங்களில் திரு.அனுமந்தன், தலைமை காவலர் என்பவரின் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலம் உள்ளதா?

ப: உள்ளது.

கே: திரு. அனுமந்தன் அவர்களின் வாக்குமூலத்தில் 13 வது வரியில் "16.06.2015 தேதியும் 19.06.2015 ம் தேதியும் திரு.ரவி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் கைப்பட எழுதி அனுப்பி வைத்தார்" என்று உள்ளதா என்றால் ?

ப: உள்ளது.

கே: Woman missing வழக்கில் கௌஷ் பாஷா, ஷமீல் பாஷாவை நல்ல முறையில் அழைத்துச்சென்றார் என்று ஆஜர் முச்சிலிக்காவில் உள்ளதா?

ப: உள்ளது.

கே: 15.06.2015 ம் தேதி திரு.நந்தக்குமார் அவர்கள் பிரிகேடியர் பணியில் இருந்தார் என்றால்?

ப: சரிதான்.

கே: திரு. நந்தக்குமார் என்பவரின் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் "15.06.2015–ம் தேதி வழக்கம்போல நான் பிரிகேடியர் பணிக்கு இரவு 08.00 மணிக்கு பள்ளிக்கொண்டா

காவல் நிலையத்தில் பணிக்கு அறிக்கை செய்து மறுநாள் 16.06.2015 ம் தேதி காலை 08.00 மணிக்கு பணி முடிந்து செல்லும் வரையில் காவல் நிலையத்தில் போலீசாரை தவிர வேறு எந்த ஒரு நபரையும் விசாரணையாகவோ அல்லது கைதியாகவோ காவல் நிலையத்தில் வைக்கவில்லை" என்ற வாசகம் உள்ளதா என்றால்?

ப: வாக்குமூலத்தில் உள்ளது.

கே: D.ராஜேஷ் குமார் என்பவரை விசாரித்தீர்களா?

ப: விசாரித்தேன்.

கே: D.ராஜேஷ் குமார் அப்போது என்ன பணியில் இருந்தார்?

ப: இளைஞர் காவல் படையில் (யூத் பிரிகேடர்)இருந்தார்.

கே: ராஜேஷ் குமார் என்பவரின் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் "18.06.2015 ம் தேதி காலை 08.00 மணியளவில் ஓய்வில் சென்றேன். அப்போது காவல் நிலையத்தில் விசாரணைக்காக யாரையும் வைத்திருக்கவில்லை" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: 5 மற்றும் 6 எதிரிகள் 16.06.2015 முதல் 18.06.2015 ஆகிய தேதிகளில் எங்கிருந்தார்கள் என்று சாட்சிகளை விசாரித்தீர்களா?

ப: சாட்சிகளை விசாரணை செய்தேன். தனிப்படை அலுவலில் இருந்ததாக தெரிவித்தார்கள்.

கே: 5ம் எதிரியை பற்றி விசாரித்தபோது குற்ற எண் 206/2015 என்ற வழக்கில் ஆம்பூர் தாலுக்கா காவல் நிலையத்தில் ஆய்வாளர் பாபு ரவிசந்திரனுடன் விசாரணையில் 5ம் எதிரி இருந்தார் என்பது சம்பந்தமாக தாங்கள் விசாரித்தீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: குற்ற எண் 206/2015 என்ற வழக்கு செம்மரக்கட்டை கடத்தல் சம்பந்தமாக 5ம் எதிரி அன்றைய தேதி 18.06.2015ல் ஈடுப்பட்டிருந்தார் என்பது சம்பந்தமாக தாங்கள் விசாரணை செய்திருக்க வேண்டும் என்றால் ?

ப: தனிப்படை அலுவலில் இருந்தார் என்பது விசாரணையில் தெரிய வந்தது.

கே: 6ம் எதிரி அதே செம்மரக்கடத்தல் வழக்கு சம்பந்தமாக ஜவ்வாதுமலையில் ஈடுபட்டிருந்தார் என்பது தங்களுக்கு தெரியுமா என்றால்?

ப: அது சம்பந்தமாக விசாரணையில் புலப்படவில்லை. ஆனால் தனிப்படை பணியில் இருந்ததாக தெரிய வந்தது.

கே: புலன் விசாரணையை நீங்கள் தொடங்கிய பின்பு அந்த மாவட்டத்திற்கான காவல் துறை கண்காணிப்பாளரிடம் வழக்கு விசாரணையை பற்றி அவ்வப்போது நான் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் ?

ப: அவ்வாறு இல்லை.

கே: நீங்கள் யாருக்கு வழக்கு புலன் விசாரணையின் முன்னேற்றததை பற்றி தெரிவிப்பீர்கள் என்றால்?

ப: எங்களது சிபிசிஐடி எஸ்பி அவர்களுக்கு மாதாந்திர அறிக்கை கொடுப்போம். இடையில் கேட்கும்பட்சத்தில் புலன் விசாரணையின் நிலை மற்றும் தன்மைகளை அவ்வப்போது தெரிவிப்போம்.

கே: திரு. கருணாநிதி, திருவண்ணாமலை சிபிசிஐடி ஆய்வாளர் அவர்களை எனக்கு உதவி புலன் விசாரணை அதிகாரியாக இந்த வழக்கில் நியமித்தார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: வேலூர் மாவட்டத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளதை நீங்கள் விசாரிக்க வந்துள்ளதால் வேலூர் மாவட்ட காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களின் ஒத்துழைப்புடன்தான் விசாரணை செய்ய முடியும் என்றால்?

ப: தேவையில்லை. சிபிசிஐடி காவலர்களின் ஒத்துழைப்பே போதுமானது. தேவைப்படின் மற்ற காவலர்களின் உதவி பெறப்படும்.

கே: இந்த வேலூர் மாவட்ட சம்பவத்திற்கு புலன் விசாரணை செய்ய வந்தபோது வேலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு தகவல் தராமல் தாங்கள் விசாரணையை தொடங்கியிருக்க முடியாது என்றால்?

ப: சரியல்ல. தொடரலாம்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்கினுடைய வழக்குக்கோப்பை பெற்ற பின்னர்தான் எங்களது சிபிசிஐடி குற்ற எண் 5/2015 ஆக வழக்கு பதிந்தேன் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த குற்ற எண் 158/2015 என்ற பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் வழக்குகோப்பை உங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்போது வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தராமல் தாங்கள் அந்த விசாரணையை தொடங்கியிருக்க முடியாது என்றும் காவல்

ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களுக்கும் அதிகாரம் இல்லை என்றால்?

ப: சரியல்ல. உரிய உத்தரவை பெற்றுதான் வழக்குக்கோப்பை நான் பெற்று புலன் விசாரணை செய்தேன்.

கே: திரு.அலி அக்பர் என்பவர் இந்த நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் இந்த வழக்கில் உள்ள எதிரிகளின் பெயர்களை தனக்குத் தெரியாது என்றும், திரு.ஜலால் என்பவர் எழுதி கொடுத்ததின் அடிப்படையில்தான் புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால்?

ப: நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளதாக ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

கே: காவல் நிலையத்தில் இருக்கும் பொதுநாட்குறிப்பு போல வழக்கின் எதிரிகள் தனிப்படையில் இருந்தபோது அவர்களும் இது போன்று குறிப்பேடுகள் வைத்திருக்க வேண்டும் என்றால்?

ப: தனிப்படைக்கு என்று தனிப்பட்ட பதிவேடுகள் கிடையாது. அவரவர் தினசரி நாட்குறிப்பில் அன்று செய்த பணியைப் பற்றி எழுதுவார்கள்.

கே: Shadow duty–ல் உள்ளவர்களுக்கு பதிவேடுகள் உண்டா என்றால்?

ப: உண்டு. Shadow duty–ல் உள்ளவர்கள் அவர்கள் செய்த பணியை பற்றி மாவட்ட காவல் துறையில் அறிக்கையாக கொடுப்பார்கள். அந்த அறிக்கையின் நகலை நான் விசாரணையில் பெற்றேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று தற்போது எனக்கு நினைவில்லை. காரணம் நான் புலன் விசாரணையிலிருந்து மாற்றப்பட்டேன். பின்பு வந்த அதிகாரி தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய Lock up entry book ஏதேனும் கைப்பற்றினீர்களா என்றால்?

ப: Lock up entry book என்று தனியாக இல்லை. Prisoner search register மற்றும் sentry relief book ஆகிய பதிவேடுகளில் ஒரு விசாரணை கைதியை பற்றி பதிவார்கள்.

கே: தாங்கள் விசாரணையை தொடங்கிய பின் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 16.06.2015 முதல் 19.06.2015 வரை பொறுப்பாளராக (SHO) இருந்தவர்கள் பற்றி விசாரித்தீர்களா ?

ப: நிலைய பொறுப்பாளராக (SHO) SSI சிங்காரம், SSI ரவி மற்றும் SSI கலைச்செல்வன் ஆகியோர்கள் இருந்துள்ளனர்.

கே: Case diary மற்றும் General diary ஆகியவைகள் வெவ்வேறு என்றால்?

ப: சரிதான்.

கே: Woman missing வழக்கின் வழக்குக்கோப்பில் அதன் படிநிலைகளை பார்த்தீர்களா?

ப: பார்த்தேன்.

கே: Woman missing குற்ற எண் 140/2015 வழக்கின் வழக்குக்கோப்பில் இந்த வழக்கின் எதிரிகள் குறித்த தகவல்கள் பதிவிடப்பட்டுள்ளனவா என்றால்?

ப: இல்லை.

கே: Woman missing குற்ற எண் 140/2015 வழக்கில் 16.06.2015 அன்று ஷமீல் பாஷாவை விசாரித்து வாக்குமூலம் பதிந்துள்ளது உள்ளதா என்றால் ?

ப: உள்ளது. அதை விசாரித்தவர் SSI ரவி ஆவார்.

கே: SSI ரவிதான் மேற்கண்ட வழக்கை விசாரித்துள்ளார், அவர்தான் Bind over செய்துள்ளார், இந்த சூழலில் SSI ரவியை எதிரியாக இந்த வழக்கில் திட்டமிட்டு சேர்க்காமல் விட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: வழக்கின் எதிரிகள் Special team–ல் பணியாற்றியதால் ஆய்வாளர் திரு.கருணாநிதி கைப்பற்றிய ஆவணங்களுக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் வழக்கின் எதிரிகள் சம்பந்தமான குறிப்புகள் எதுவும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் செல்லலாம்?

ப: சுமார் 45 நிமிடங்களில் செல்லலாம்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று தாங்கள் விசாரித்தீர்களா?

ப: விசாரித்தேன்.

கே: ஷமீல் பாஷாவை அழைத்துச்சென்ற கௌஷ் பாஷா எத்தனை மணி நேரம் கழித்து மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார்?

ப: மூன்றரை மணி நேரம் கழித்து சேர்த்திருக்கிறார்.

கே: அடிப்பட்டவர்களை உள்நோயாளியாக அனுமதிக்கும்போது அந்த நோயாளிக்கு ஒரு In patient number கொடுப்பார்கள் என்றால்?

ப: சரிதான். அந்த எண் I.P.No.4913/MLC.

கே: இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவர்களை விசாரித்தீர்களா?

ப: விசாரிக்கவில்லை.

கே: வேலூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்த ஆவணத்தின் In patient no. 35471 என்றால் ?

ப: சரிதான்.

கே: ஒரு மருத்தவமனையில் சேர்க்கும்போது In patient எண், மற்றொரு மருத்துவமனைக்கு அதே நோயாளி மாற்றப்படும்போது அதே In patient எண்தான் reference–ல் இருக்க வேண்டும் என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: வேலூர் மருத்துவமனையில் வேறு ஒரு In patient no.35471 என்று கொடுக்கப்பட்டிருக்கும்போது அவர் வேறு ஒரு சம்பவத்தில் அடிப்பட்டிருந்தால் மட்டுமே மாற்று எண் கொடுக்கப்பட முடியும் என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் ஒரு புறக்காவல் நிலையம் இருக்கும் என்றால்?

ப: சரிதான். பெரிய மருத்துவமனையில் அவ்வாறு இருக்கும், சிறிய மருத்துவமனையில் அவ்வாறு இருக்காது, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் கொடுப்பார்கள்.

கே: ஷமீல் பாஷா அந்த மருத்துவமனையிலிருந்து Absconding ஆன பிறகு புறக்காவல் நிலையத்தில் அது பற்றி விசாரித்து குறிப்பிட்ட காவல் நிலையத்திற்கு தகவல் அனுப்பப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதியப்பட வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: தாங்கள் புலன் விசாரணை செய்தபோது ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் Absconding சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் ஷமீல் பாஷா மீண்டும் எப்போது மருத்துவமனைக்கு வந்தார் என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: வேறு ஒரு சம்பவத்தில் ஷமீல் பாஷா தாக்கப்பட்டதின் அடிப்படையில்தான் ஷமீல் பாஷாவின் உடம்பில் காயங்கள் அவரின் உறவினர்களாலோ அல்லது வேறு யாரோலோ தாக்கப்பட்டதால்தான் அதிகப்படியான காயங்கள் ஏற்பட்டு வேலூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும்போது I.P.No.35471 என்று தரப்பட்டுள்ளது என்பது தங்களுக்கு தெரியுமா?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: 19.06.2015 கௌஷ் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஷமீல் பாஷாவை சேர்த்தபோது அவர் மீதிருந்த காயங்களும், அவருடைய உறவினர்களால் அல்லது கௌஷ் பாஷாவால் உருவாக்கப்பட்ட காயங்கள் என்றால்?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: ஷமீல் பாஷா ஆம்பூர் மருத்துவமனையில் சேர்த்தபோது இருந்த காயங்களும், வேலூர் மருத்துவமனையில் அனுமதித்தபோது காணப்பட்ட அதிகப்படியான காயங்களும் எதிரிகளால், தங்களால் சொல்லப்படுகின்ற இடத்திலோ, குறிப்பிடுகின்ற நேரத்திலோ ஏற்படுத்தப்பட்டதாக ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரையிலான தேதிகளில் வழக்கின் எதிரிகள் குற்றச்சாட்டில் குறிப்பிட்டதுபோல் எந்த குற்றமும் செய்ததாக பொதுநாட்குறிப்பு, வழக்குக்கோப்பு, Pocket diary, Duty roaster, Rough duty roaster, Sentry relief book, Vehicle diary, PSR entry மற்றும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட எந்த ஆவணங்களும் இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: ஷமீல் பாஷாவிற்கு ஏற்பட்ட காயங்கள் வழக்கின் எதிரிகளால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கான நேரடி சாட்சியோ மற்றும் ஆவணங்களோ உள்ளனவா என்றால் ?

ப: சாட்சிகள் அருணாச்சலம் மற்றும் சிவா ஆகியோர் வழக்கின் எதிரிகளால் காயப்படுத்தப்பட்டதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள்.

கே: அதைப்பற்றி மேற்கண்ட நபர்கள் கூறியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 ஆகிய தேதிகளில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணிபுரிந்த அதிகாரிகளால் மட்டும்தான் ஷமீல் பாஷாவை விசாரிக்கப்பட்டிருக்க முடியும் என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் SSI ரவி ஆகியோர் விசாரித்திருக்கிறார்கள்.

கே: Shadow duty–ல் வழக்கின் எதிரிகள் அனைவரும் பணியாற்றியது சம்பந்தமான பதிவேடுகள் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: ஷமீல் பாஷா Lock up death ஆனதற்கான ஆவணங்கள் எதையாவது தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை.

கே: வழக்கின் எதிரிகளுக்கும் குறிப்பாக 5 மற்றும் 6ம் எதிரிகளுக்கும் 16.06.2015 முதல் 19.06.2015 வரையிலான தேதிகளில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இல்லை என்றும், 5 மற்றும் 6ம் எதிரிகள் செம்மரக்கடத்தல் வழக்கு சம்பந்தமாக வேறு இடங்களில் வழக்கு சம்பந்தமாக பணியாற்றிக்கொண்டிருந்தார்கள், அது சம்பந்தமான அவர்களுடைய Movement register மற்றும் அவர்களின் செயல்பாடுகள் போன்றவற்றை தாங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்?

ப: Movement register குறித்த பதிவேடுகள் ஏதும் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை.

கே: வழக்கின் எதிரிகள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டதற்கான Law enforcement பதிவேடுகள் எதையும் தாங்கள் சமர்ப்பிக்காததால் மேலும் திட்டமிட்டு சிலரை காப்பாற்றுவதற்காக தாங்கள் 5 மற்றும் 6 ஆகிய எதிரிகளை பொய்யாக இந்த வழக்கில்

இணைத்துள்ளீர்கள், மேலும் தாங்கள் சரியாக விசாரணை செய்யவில்லை மற்றும் இந்த வழக்கு ஒரு பொய்யான வழக்கு ஆகும், வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.16 மணி**

**மறுவிசாரணை – இல்லை.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.06.30 17:25:02 +0530